DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **STC.No.264/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கணேசன் (Pw.4)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of March 2026

( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை –**

நான் தற்போது திருச்சுழியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். நான் 1வருடத்திற்கு முன்பு முத்துமாரி என்பவரின் வீட்டருகே நின்று கொண்டிருந்தபோது மாலையில் திருச்சுழி போலிசார் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள், அதில் நான் கையொப்பம் செய்தேன். மற்றொருவர் கையொப்பம் செய்தவர் பெயர் தெரியாது. (**அந்த பார்வை மகஜர் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் கையொப்பம் போடச் சொன்னதால் நான் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்துராணி எனது அண்ணன் மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருவருமே எனது உறவினர்கள். ஒரு கையொப்பம்தான் செய்தேன். நான் சொன்ன, நாள் நேரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **STC.No.264/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : பூமிநாதன் (Pw.3)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of March 2026

( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை –**

நான் தற்போது திருச்சுழியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரி தெரியும். கடந்த 2025ம் வருடம் மார்ச் மாதம் நான் ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது மாலை 4மணியளவில் அசா1ன் மகள் கனிஷ்கா மாலை 5மணியளவில் எனக்கு போன் செய்து தனது அம்மாவை ஆஜர் எதிரி மற்றும் அவரது கணவர் செல்வகுமார், அவரது மகள் ஆகிய மூவரும் அடிக்கிறார்கள் அதனால் நீங்கள் வருமாறு என்னிடம் சொன்னார். 5மணியளவில் நான் சம்பவ இடம் வந்த சண்டையை விலக்கிவிட்டேன். அசா1ம் எதிரியும் மாறி மாறி திட்டிக்

கொண்டிருந்தார்கள். நான் வருவதற்குமுன்பு கட்டையை வைத்து அசா1ஐ கால் மற்றும் கையில் அடித்ததாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 29.03.2025ம் தேதியன்று மாலை 6 மணியளவில் நானும் எனது ஊரைச் சேர்ந்த ராமநாதன் என்பவரும் முத்துமாரி என்பவரின் வீட்டிற்கு அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது முத்துமாரி மனைவி இந்துராணியை ராதிகா என்பவர் அவரது வீட்டின் முன்பு அசிங்கமாக பேசி இப்படி தெருவில் கல், மண் எல்லாம் போட்டு வைத்திருக்கிறாய் என்று பேசியபோது இந்துராணி கல், மண்ணைநாங்கள் போடவில்லைஎன்று கூறியபோது ராதிகா அருகில் கிடந்த கம்பை வைத்து இந்துராணியின் இடது கணுக்காலில் அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் அருகில் இருந்த நானும், ராமநாதனும் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டோம் என்று சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிக்கு ஆதரவாக சம்பவத்தை கேள்விபட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **STC.No.264/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ராமநாதன் (Pw.2)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of March 2026

( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை –**

நான் தற்போது பச்சேரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரி தெரியும். கடந்த 29.03.2025ம் தேதியன்று நான் அருப்புக்கோட்டையில் இருந்தேன். அசா1ன் மகள் கனிஷ்கா மாலை 5மணியளவில் எனக்கு போன் செய்து தனது அம்மாவை ஆஜர் எதிரி மற்றும் அவரது கணவர் செல்வகுமார், அவரது மகள் ஆகிய மூவரும் அடிக்கிறார்கள் அதனால் நீங்கள் வருமாறு என்னிடம் சொன்னார். 45 நிமிடம் கழித்து நான் வந்தபோது அசா1 திருச்சுழி அரசு மருத்துவமனையில் இருந்தார். அவருக்கு இடது கண்ணில் காயம் இருந்தது. 2 நாட்கள் கழித்து

எனது அக்காவிடம் என்ன சண்டை என்று கேட்டபோது இடப்பிரச்சனை என்று கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 29.03.2025ம் தேதியன்று மாலை 6 மணியளவில் நானும் எனது ஊரைச் சேர்ந்த பூமிநாதன் என்பவரும் முத்துமாரி என்பவரின் வீட்டிற்கு அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது முத்துமாரி மனைவி இந்துராணியை ராதிகா என்பவர் அவரது வீட்டின் முன்பு அசிங்கமாக பேசி இப்படி தெருவில் கல், மண் எல்லாம் போட்டு வைத்திருக்கிறாய் என்று பேசியபோது இந்துராணி கல், மண்ணைநாங்கள் போடவில்லைஎன்று கூறியபோது ராதிகா அருகில் கிடந்த கம்பை வைத்து இந்துராணியின் இடது கணுக்காலில் அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் அருகில் இருந்த நானும், பூமிநாதனும் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டோம் என்று சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிக்கு ஆதரவாக சம்பவத்தை கேள்விபட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.